முழுப்பதிப்புரிமையுடையது

E.M.F.


அந்தரங்கமானது

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

# க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சை - 2022 (2023)

## 33 - வரலாறு

## புள்ளியிடும் திட்டம்



இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக் கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

kalvi.lk

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த (சா.தர)ப் பரீட்சை – 2022 (2023)

### 33 – வரலாறு

### புள்ளி வழங்கும் திட்டம்

| | | | |
|---|---|---|---|
| வரலாறு | I | 01 x 40 | = 40 புள்ளிகள் |

---

**பகுதி I**

1 ஆம் வினா கட்டாயமானது

அ. I　18

ஆ. II　12　　= 30 புள்ளிகள்

**பகுதி II**

| | | |
|---|---|---|
| வினா இலக்கம் 2 | = | 18 புள்ளிகள் |
| வினா இலக்கம் 3 | = | 18 புள்ளிகள் |
| வினா இலக்கம் 4 | = | 18 புள்ளிகள் |
| வினா இலக்கம் 5 | = | 18 புள்ளிகள் |
| வினா இலக்கம் 6 | = | 18 புள்ளிகள் |
| வினா இலக்கம் 7 | = | 18 புள்ளிகள் |

(ஏதாவது 4 வினாக்களுக்கு)

4 x 18 = 72 புள்ளிகள்

**பகுதி III**

| | | |
|---|---|---|
| வினா இலக்கம் 8 | = | 18 புள்ளிகள் |
| வினா இலக்கம் 9 | = | 18 புள்ளிகள் |

ஏதாவது ஒரு வினாவிற்கு

1 x 18 = 18 புள்ளிகள்

(பகுதி I, II, III) **120 புள்ளிகள்**

**இறுதிப் புள்ளியைக் கணித்தல்**

முழு விடைத்தாளுக்குமான இறுதிப்புள்ளியை, புள்ளி வழங்கும் குழுவினால் தீர்மானிக்க முடியாது

0708000188110164

**க.பொ.த (சாதாரண தர)ப் பரீட்சை - 2022(2023)**

**விடைத்தாள்களுக்குப் புள்ளியிடலுக்கான பொது நுட்ப முறைகள்**

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன் பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. சகல உதவிப் பரீட்சகர்களும் விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற மைப் பேனாவைப் பயன்படுத்தவும்.
2. பிரதம பரீட்சகர் ஊதாநிற மைப்பேனாவைப் பயன்படுத்த வேண்டும்.
3. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும் போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
4. இலக்கங்களை எழுதும் போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, ஒப்பம் இடவும்.
5. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பின்னங்களாகப் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் ☐ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.
6. எண்கணித பரீட்சகரினால் புள்ளிகள் பிழையற்றது என உறுதிப்படுத்த நீலநிற அல்லது கறுப்புநிறப் பேனாவினை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) .................................................... ✓ $\frac{4}{5}$
....................................................
....................................................

(ii) .................................................... ✓ $\frac{3}{5}$
....................................................
....................................................

(iii) .................................................... ✓ $\frac{3}{5}$
....................................................
....................................................

(03) $$(i)\ \frac{4}{5} + (ii)\ \frac{3}{5} + (iii)\ \frac{3}{5} = \boxed{\frac{10}{15}}$$

**பல்தேர்வு விடைத்தாள்**

**1. துளைத்தாள் தயாரித்தல்**

I. புள்ளி வழங்கும் திட்டத்தின் படி சரியான தெரிவைத் துளைத்தாளில் அடையாளமிடவும்.

II. அவ்வாறு அடையாளமிடப்பட்ட இடத்தை வெட்டி நீக்கித் துளைத்தாளைத் தயாரிக்கவும்.

III. துளைத்தாளை விடைகளின் மீது சரியாக வைத்துக் கொள்ளக்கூடியதாகச் சுட்டெண் அடைப்பையும் வெட்டி நீக்கவும். சரியான விடைகளின் எண்ணிக்கையைக் காட்டும் அடைப்பையும் வெட்டி நீக்கவும்.

IV. சரியான, பிழையான விடைகளை குறிப்பிடக்கூடியதாக ஒவ்வொரு வரிசைக்கும் இறுதியில் வெற்று நிரையொன்றை வெட்டி ஏற்படுத்திக் கொள்ளவும்.

**V. வெட்டிக்கொண்ட துளைத்தாளில் பிரதம பரீட்சகரிடம் கையொப்பம் பெற்று அங்கீகரித்துக் கொள்ளவும்.**

2. **அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்து விட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.**
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை √ அடையாளத்தாலும் பிழையான விடையை X அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் எழுதவும். அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை மற்றும் கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளினால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும், **பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் √ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.**
2. புள்ளிகளை குறிப்பிடும் போது ஓவலண்ட் கடதாசியின் இடது பக்க நிரலைப் பயன்படுத்தவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன்பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக **2 இலக்கங்களில் பதியவும்**. வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டிவிடவும்.
4. மொத்தப் புள்ளிகளை கவனமாக கூட்டி முன்பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் ஒவ்வொரு விடைக்கும் வழங்கப்பட்டுள்ள புள்ளிகளின் தொகையினை ஒவ்வொரு பக்கமாக கூட்டவும். அக்கூட்டுத்தொகை உங்களால் முன்பக்கத்தில் மொத்தம் எனக் குறிப்பிட்ட மொத்தபுள்ளிகளுக்கு சமமானதா? என பரீட்சிக்கவும்?

**★ புள்ளிப்பட்டியல் தயாரித்தல்**

I. ஒரு வினாப்பத்திரம் உள்ள பாடங்கள் தவிர ஏனைய சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்பட மாட்டாது.

II. ஒவ்வொரு வினாப்பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியான புள்ளிப்பட்டியலில் பதியப்படவேண்டும்.

III. வினாப்பத்திரம் I இற்கான புள்ளிப்பட்டியலில் **"Total Marks"** என்ற நிரலில் பதிந்து **எழுத்திலும் எழுத வேண்டும்.**

IV. வினாப்பத்திரம் II இற்கான புள்ளிப்பட்டியலை தயார் செய்யும் போது பகுதிப் புள்ளிகளைப் பதிவதோடு வினாப்பத்திரம் II இன் இறுதிப் புள்ளிகளை புள்ளிப் பட்டியலில் **"Total Marks"** என்ற நிரில் பதியவும்.

V. 43 சித்திரப் பாடத்திற்குரிய I,II மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதிந்து **எழுத்திலும் எழுத வேண்டும்.**

VI. 21 - சிங்களமொழியும் இலக்கியமும், 22 - தமிழ்மொழியும் இலக்கியமும் ஆகிய இரு பாடங்களும் வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளிப் பட்டியலில் பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும். வினாப்பத்திரம் II, III இற்கான பகுதிப் புள்ளிகளை உள்ளடக்கி அவ் வினாப்பத்திரத்தின் மொத்தப் புள்ளிகளை, புள்ளிப்பட்டியலில் பதிய வேண்டும்.

**முக்கிய குறிப்பு:**

I. சகல சந்தர்ப்பங்களிலும் ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் உரிய முழுப் புள்ளியானது முழுத்தானத்தில் புள்ளிப் பட்டியலில் பதியப்படுதல் வேண்டும். எந்த விதமான காரணங்களிற்காகவும் வினாப்பத்திரத்தின் இறுதிப் புள்ளியானது தசம தானங்களில் பதியப்படலாகாது.

II. புள்ளிப் பட்டியலின் சகல பக்கங்களிலும் புள்ளிகளைப் பதிந்த உதவிப்பரீட்சகர், புள்ளிகளை சரிபார்த்த உதவிப்பரீட்சகர், மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் எண்கணித பரீட்சகர் மற்றும் பிரதம பரீட்சகர் தமது குறியீட்டு இலக்கத்தை எழுதி கையொப்பமிட்டு உறுதிப்படுத்துவது கட்டாயமாகும்.



kalvi.lk

All Rights Reserved

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**33 T I**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2022(2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2022(2023)
**General Certificate of Education (Ord. Level) Examination, 2022(2023)**

ඉතිහාසය I
வரலாறு I
History I

පැය එකයි
ஒரு மணித்தியாலம்
*One hour*

**அறிவுறுத்தல்கள் :**

- ※ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ※ **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.
- ※ உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.
- ※ அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

**1.** பின்வருவனவற்றுள் இலங்கையின் வரலாறு தொடர்ச்சியாக எழுதப்பட்ட நூல் எது?
(1) தீபவம்சம் (2) மகாவம்சம் (3) பூஜாவலிய (4) ராஜாவலிய

**2.** ஆக்கிரமிப்பாளராக இருந்தபோதும் நேர்மை, நீதி மிக்க ஆட்சியைக் கொண்டிருந்தவராக மகாவம்சத்தில் குறிப்பிடப்படும் ஆட்சியாளன் யார்?
(1) எல்லாளன் (2) இராஜராஜன்
(3) ஸ்ரீமாறஸ்ரீ வல்லபன் (4) இராஜேந்திர சோழன்

**3.** கைவிடப்பட்ட குளங்களை அண்டிய கிராமம் எப்பெயரால் இனங்காணப்பட்டது?
(1) பரிக்கித்த கிராமம் (2) அபரிக்பித்த கிராமம்
(3) நியம் கிராமம் (4) ஒலகம்

**4.** பின்வருவனவற்றுள் கிராமத் தலைவன் ஆகுவதற்குத் தேவையெனக் கருதப்பட்ட முக்கிய தகைமை எது?
(1) அரசியல் அனுபவம்
(2) பொருளாதார ரீதியில் சொத்துச் செல்வம் கொண்டிருத்தல்
(3) கிராம மக்களிடையே பிரபலம் பெற்றிருத்தல்
(4) உயர் குலத்தில் பிறந்திருத்தல்

**5.** இந்த நாட்டை நிர்வாக அலகுகளாகப் பிரித்து அந்தந்தப் பிரிவுகளுக்குப் பொறுப்பாக மந்திரிமாரை நியமித்தவராகக் கருதப்படும் முதல் ஆட்சியாளன்
(1) பண்டுகாபய மன்னன் (2) துட்டகைமுனு மன்னன்
(3) வசப மன்னன் (4) முதலாம் விஜயபாகு மன்னன்

**6.** பின்வரும் விடயங்களில் நாட்டின் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்கு முதலாம் விஜயபாகு மன்னன் பின்பற்றிய முக்கிய நடவடிக்கை
(1) பொலன்னறுவையைத் தனது நிர்வாக நிலையமாகத் தெரிவு செய்தமை.
(2) சோழர்களிடமிருந்து நாட்டை விடுவித்தமை.
(3) அயல் நாடுகளுடன் நட்புறவை ஏற்படுத்தியமை.
(4) பாரியளவிலான குளக்கட்டுக்களை நிர்மாணிக்க ஆரம்பித்தமை.

**7.** பொருளாதாரத்துக்கு செய்த சேவை காரணமாக தெய்வநிலை பெற்ற மன்னன்
(1) வசபன் (2) மகாசேனன்
(3) தாதுசேனன் (4) மகா பராக்கிரமபாகு

**8.** பின்வரும் நிரல் I இல் மன்னர்கள் சிலரின் பெயர்களும் நிரல் II இல் இம் மன்னர்களுடன் தொடர்புடைய சில விடயங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. நிரல் I இற்கு ஏற்ப நிரல் II இனைப் பொருத்தும்போது வரும் சரியான விடை எது?

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1. பண்டுகாபய மன்னன் | A - நாட்டை ஐக்கியப்படுத்தல் |
| 2. பாதிகாபய மன்னன் | B - முதன் முறையாக கிராமங்களின் எல்லைகள் தீர்மானிக்கப்படுதல் |
| 3. துட்டகைமுனு மன்னன் | C - கலாவாவி அமைக்கப்படுதல் |
| | D - தூதுவர்களை உரோமுக்கு அனுப்புதல் |

(1) A, B, C (2) A, C, D (3) B, A, C (4) B, D, A

**9.** புராதன காலந்தொட்டு இலங்கை சர்வதேச வியாபார நடவடிக்கைகளில் முக்கியத்துவம் பெறுவதற்கான காரணம்
(1) சிறிய தீவாக அமைந்திருத்தல்
(2) இந்தியாவிலிருந்து பிரிந்து அமைந்திருத்தல்
(3) இந்து சமுத்திரத்தின் மத்திய நிலையத்தில் அமைந்திருத்தல்
(4) இயற்கையான திருகோணமலைத் துறைமுகம்

**10.** பின்வருவனவற்றுள் குளக்கட்டு இடிந்து விழாமலிருப்பதற்கு பின்பற்றப்பட்ட செயன்முறை எது?
(1) இயற்கையான கற்பாறைகளைத் தெரிவுசெய்து குளக்கட்டை அமைத்தல்
(2) பலமான கருங்கற்களைக் கொண்டு குளக்கட்டை அமைத்தல்
(3) மடைக்கதவு மூலம் மேலதிக நீரை வெளியேற்றுதல்
(4) அலை தாங்கியை பலம் வாய்ந்ததாக அமைத்தல்

- பின்வரும் A தொடக்கம் E வரையிலான கூற்றுகளை நன்கு வாசித்து **11** ஆம் **12** ஆம் வினாக்களுக்கு விடை எழுதுக.

A - பூங்காக்களை நிர்மாணித்தல் பற்றி மேன்மையான அறிவு காணப்படுதல்
B - பாதுகாப்புக்காக நீர் அகழி, செங்கல்லினாலான மதில் என்பன பயன்படுத்தப்படுதல்
C - நவீன கொங்கிறீட் தொழினுட்பத்திற்குச் சமனாக அத்திவாரம் அமைத்தல் இருத்தல்
D - சுகாதாரமும் உடல் நலமும் பற்றிய ஆழமான அறிவைக் கொண்டிருத்தல்
E - சத்திர சிகிச்சைக்கான உபகரணங்கள் பயன்படுத்தப்பட்டதற்கான சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டிருத்தல்

**11.** சீகிரியா தொடர்பான தகவல்களைக் குறிக்கும் விடை எது?
(1) A, B (2) B, C (3) C, D (4) D, E

**12.** ஆலாஹன பிரிவெனா தொடர்பான தகவல்களைக் குறிக்கும் விடை எது?
(1) A, B (2) B, C (3) C, D (4) D, E

**13.** குடிநீரின் குறிப்பிட்ட தரத்தையும் குளிர்ச்சியையும் பேணிக்கொள்வதற்கு புராதன காலத்தில் கட்டப்பட்ட நிர்மாணிப்பு எது?
(1) குளங்கள் (2) ஆண்டிய கிணறு (3) ஊராகெட கிணறு (4) அணைக்கட்டு

**14.** சூழலைப் பாதுகாப்பதற்குப் பின்பற்றப்பட வேண்டிய சட்டங்கள் உள்ளடங்கிய கல்வெட்டு எது?
(1) கல்பொத்த கல்வெட்டு (2) அனுராதபுர கல்வெட்டு
(3) பனாகடுவ செப்புத்தகடு (4) தோணிகல கல்வெட்டு

**15.** எங்கள் நாட்டில் மிகப் பழைய காலத்திலிருந்தே மக்கள் கஞ்சி வகைகளைத் தமது உணவில் சேர்த்துக் கொள்வதற்கான முக்கிய காரணம் யாது?
(1) தயாரிப்பதற்கு இலகுவானதாயிருத்தல்
(2) இலகுவில் சமிபாடு அடையக்கூடியதாயிருத்தல்
(3) கஞ்சிக்குத் தேவையான பொருள்கள் பெருமளவில் கிடைத்தல்
(4) உடல் வலிமையை அதிகரிக்கச் செய்தல்

0508000188110164

**16.** கலிங்க மாகன், சந்திரபானு ஆகியோரின் ஆக்கிரமிப்பிலிருந்து நாட்டை விடுவித்த ஆட்சியாளன்
(1) முதலாம் விஜயபாகு (2) முதலாம் பராக்கிரமபாகு
(3) இரண்டாம் பராக்கிரமபாகு (4) மூன்றாம் விஜயபாகு

**17.** இலங்கையின் இராசதானிகள் சில நிரல் I இலும் புராதன நிர்வாகப் பிரிவுகள் சில நிரல் II இலும் தரப்பட்டுள்ளன. நிரல் I இற்கு ஏற்ப நிரல் II இனை பொருத்தும்போது வரும் சரியான விடை எது?

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1. அனுராதபுரம் | A - மாயரட்டை |
| 2. கண்டி | B - இராசரட்டை |
| 3. கோட்டை | C - உருகுணைரட்டை |
| | D - மலயரட்டை |

(1) A, B, C (2) A, B, D (3) B, A, C (4) B, D, A

**18.** முதன் முறையாகக் கண்டியை சுதந்திர இராச்சியமாகக் கட்டியெழுப்பிய அரசன்
(1) முதலாம் இராஜசிங்கன் (2) சேன சம்மத விக்கிரமபாகு
(3) ஜயவீர பண்டார (4) முதலாம் விமலதர்மசூரியன்

● பின்வரும் A, B என்ற கூற்றுக்களைக் கொண்டு **19** ஆம் வினாவுக்கு விடை எழுதுக.
A - தேசிய அரசுகளின் தோற்றம்
B - வர்த்தக விருத்தி

**19.** ஐரோப்பாவில் மறுமலர்ச்சி தொடர்பில்
(1) A உம் B உம் சரியானவை. (2) A உம் B உம் பிழையானவை.
(3) A சரியானது என்பதோடு B பிழையானது. (4) A பிழையானது என்பதோடு B சரியானது.

**20.** தொலைநோக்கியைக் கண்டுபிடித்தவர் யார்?
(1) நிக்கலஸ் கொபர்னிகஸ் (2) ஜொஹென்ஸ் கெப்லர்
(3) ஜொஹேன்ஸ் கூடன்பேர்க் (4) கலிலியோ கலிலி

**21.** கைத்தொழில் புரட்சியின்போது சாயம், மருந்துகள், எண்ணெய், பசளை ஆகிய உப உற்பத்திகளின் காரணமாக விருத்தியடைந்த கைத்தொழில் எது?
(1) நெசவுக் கைத்தொழில் (2) இரும்பு உருக்குக் கைத்தொழில்
(3) நிலக்கரிக் கைத்தொழில் (4) விவசாயக் கைத்தொழில்

**22.** பின்வருவனவற்றுள் கைத்தொழில் புரட்சியின்போது பயிர்ச் செய்கையில் நிலமாற்றுமுறை அறிமுகம் செய்யப்பட்டதால் ஏற்பட்ட அனுகூலம் எது?
(1) பயிர்களில் நோய் பரவுதல் குறைவடைதல்
(2) விதைப்பதற்கான விதையின் அளவு குறைவடைதல்
(3) குறைந்தளவு நீர் வசதியுடன் பயிர் செய்யக் கூடியதாயிருந்தமை
(4) எத்தகைய கால நிலைமைகளிற்கும் பயிர் தாக்குப்பிடித்தல்

**23.** கீழே A தொடக்கம் D வரை தரப்பட்டுள்ள இடங்களில் ஆங்கிலேயரால் இந்தியாவில் தாபிக்கப்பட்ட வர்த்தக நிலையங்களைக் குறிப்பிடும் விடை எது?
A - மதராஸ்
B - பம்பாய்
C - பாண்டிச்சேரி
D - சந்திரநுகர்
(1) A, B (2) A, D (3) B, C (4) C, D

**24.** கண்டி இராசதானி உத்தியோகபூர்வமாக பிரித்தானியரிடம் ஒப்படைக்கப்பட்டது,
(1) ஸ்ரீ விக்கிரம இராஜசிங்க மன்னன் கைது செய்யப்பட்ட பின்னர் ஆகும்.
(2) 1815 கண்டி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்னர் ஆகும்.
(3) 1818 பிரகடனத்தின் பின்னர் ஆகும்.
(4) 1833 கோல்புறூக்-கமரன் சீர்திருத்தங்களின் பின்னர் ஆகும்.

**25.** இலங்கையில் திருகோணமலைத் துறைமுகம் தொடர்பில் ஆங்கிலேயர் கவனம் செலுத்தியமைக்கான முக்கிய காரணம்
(1) இந்தியாவின் கிழக்குக் கரையில் தமது கடல் ஆதிக்கத்தைப் பாதுகாப்பதற்கான தேவை
(2) திருகோணமலைத் துறைமுகத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் பெறுமதி வாய்ந்த வர்த்தகப் பொருட்களைப் பெறக் கூடியதாயிருந்தமை
(3) வெளிநாட்டு வியாபாரத்துக்குப் பொருத்தமானதாகக் காணப்பட்டமை
(4) பெரிய கப்பல்களுக்குப் பொருத்தமான ஆழமான கடல் துறைமுகமாக இருந்தமை

**26.** ஆங்கிலேயர் கண்டி இராச்சியத்தை இலகுவாகக் கைப்பற்றுவதற்கு ஏதுவான முக்கிய காரணி,
(1) பொது மக்கள் ஆங்கிலேயருடன் ஒன்று சேர்ந்தமை
(2) ஆங்கிலேயரின் இராணுவ பலம்
(3) மன்னனுக்கும் மக்களுக்கும் இடையிலான தொடர்பு தூரவிலகியிருந்தமை
(4) ஆங்கிலேயருக்கு கரையோரப் பிரதேச மக்கள் ஆதரவு வழங்கியமை

**27.** கொழும்பு சாஹிரா கல்லூரியைத் தாபித்தவர் யார்?
(1) ஹென்றி ஸ்ரீல் ஒல்கொட் (2) ஒராபி பாஷா
(3) எம். சி. சித்தி லெப்பை (4) ரி. பீ. ஜயா

**28.** பின்வருவனவற்றுள் சேர்ச் மிஷனரி சங்கத்தினால் வெளியிடப்பட்ட வெளியீடு எது?
(1) லக்மினி பஹன (2) மாசிக்க தேக்க
(3) லங்கா லோகய (4) சரசவி சந்தரஸ

**29.** பின்வருவனவற்றுள் ஐரோப்பிய வணிகர்களினால் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களின் முக்கிய நோக்கம் எது?
(1) ஆளுநரின் அதிகாரங்களை மட்டுப்படுத்தல்
(2) சட்டவாக்கக் கழகத்துக்கு இனவாரிப் பிரதிநிதித்துவத்தை நீக்குதல்
(3) சட்டவாக்கக் கழகத்துக்கு நியமிக்கப்படும் உத்தியோகச் சார்புள்ள அங்கத்தவர் எண்ணிக்கையை அதிகரித்தல்
(4) பெருந்தோட்டப் பயிர்செய்கைக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல்

**30.** டொனமூர் சீர்திருத்தத்தினால் வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்டது,
(1) படித்த இலங்கையர்களுக்கு மட்டும் (2) 18 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கு மட்டும்
(3) 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் (4) 21 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும்

**31.** இலங்கை தேசிய காங்கிரசின் முதல் தலைவர் யார்?
(1) ரி. பி ஜயதிலக (2) எப். ஆர். சேனநாயக்க
(3) பொன்னம்பலம் அருணாசலம் (4) ஜேம்ஸ் பீரிஸ்

**32.** அரசுக் கழகத்தில் இலங்கையரான அமைச்சர்களுக்கு உரித்தல்லாத துறை
(1) கல்வி (2) நிதி நடவடிக்கைகள்
(3) உள்ளூராட்சி (4) சுகாதாரம்

**33.** பின்வருவனவற்றுள் இலங்கையில் தேயிலைப் பயிர்ச்செய்கைக்கு பொருத்தமற்ற பிரதேசம் எது?
(1) தாழ்நில ஈரவலயம் (2) உலர் வலயம்
(3) மலைப்பிரதேச ஈரவலயம் (4) ஈரமான உயர மலைப் பிரதேசம்

**34.** இந்நாட்டில் சிங்கோனாப் பயிர்ச்செய்கை தோல்வியடைந்தமைக்கு அடிப்படையான முக்கிய காரணி யாது?
(1) பயிர்ச்செய்கையாளர்களுக்கு சிங்கோனா பயிர்ச்செய்கை பற்றிய விளக்கம் இல்லாதிருந்தமை
(2) பயிர்ச்செய்கைக்காக பணத்தை முதலீடு செய்வதற்குப் போதுமான முதலீட்டாளர்கள் இல்லாதிருந்தமை
(3) மூலிகைப் பயிராக இருந்தமையால் உலக சந்தையில் இதற்கான கேள்வி மட்டுப்படுத்தப்பட்டதாக இருந்தமை.
(4) சிங்கோனாப் பயிர்ச்செய்கைக்குத் தேவையான நிழல் வழங்குவதற்கு மேலதிக செலவு ஏற்பட்டமை


kalvi.lk

- பின்வரும் A தொடக்கம் D வரையிலான தகவல்களைக் கொண்டு **35,36** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

  A - நீதித் துறையின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கு நீதிச்சேவை ஆணைக்குழு நியமிக்கப்படுதல்
  B - அமைச்சரவை அமைச்சர்களை நியமிக்கும் அதிகாரத்தை ஜனாதிபதி கொண்டிருத்தல்
  C - பிரித்தானிய பேரரசுடன் கொண்டிருந்த அரசியல் யாப்பு ரீதியிலான தொடர்புகள் முடிவடைதல்
  D - அமைச்சரவையின் தலைவர் பிரதமர் ஆவார்

**35.** 1972 அரசியல் யாப்புடன் தொடர்புடைய தகவல்கள் உள்ளடங்கிய விடை எது?
(1) A, B (2) A, D (3) B, D (4) C, D

**36.** 1978 அரசியல் யாப்புடன் தொடர்புடைய தகவல்கள் உள்ளடங்கிய விடை எது?
(1) A, B (2) A, D (3) B, D (4) C, D

- பின்வரும் A, B என்ற கூற்றுக்களைக் கொண்டு **37** ஆம் வினாவுக்கு விடை தருக.

  A - பொஸ்ரன் தேநீர் விருந்து
  B - பஸ்ரீலைத் தாக்குதல்

**37.** பிரான்சியப் புரட்சி தொடர்பாக
(1) A உம் B உம் சரியானவை.
(2) A உம் B உம் பிழையானவை.
(3) A சரியானது என்பதுடன் B பிழையானது.
(4) A பிழையானது என்பதுடன் B சரியானது.

- பின்வரும் A, B, C, D என்பனவற்றின் கீழ் கூற்றுகள் சோடிகளாகத் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு சொற் சோடியிலும் முதலாவதுக்கும் இரண்டாவதுக்கும் இடையிலான தொடர்பினைப் பரிசீலித்து **38** தொடக்கம் **40** வரையான வினாக்களுக்கு விடை தருக.

  A - (1) - முதலாம் உலக மகா யுத்தம்
  (2) - சரஜிவோ நிகழ்வு
  B - (1) - ஜெர்மனி
  (2) - அச்சு நாடுகள்
  C - (1) - பாதுகாப்பு சபை
  (2) - தேசிய சங்கம்
  D - (1) - இரண்டாம் உலக மகா யுத்தம்
  (2) - ஐக்கிய நாடுகள் சபை

**38.** முதலாவதுக்கும் இரண்டாவதுக்கும் இடையிலான தொடர்பைக் காட்டாத சோடி எது?
(1) A (2) B (3) C (4) D

**39.** முதலாவது ஏற்படுவதற்கு இரண்டாவது காரணமாவதைக் காட்டும் சோடி எது?
(1) A (2) B (3) C (4) D

**40.** இரண்டாவது தோன்றியது முதலாவதின் விளைவாக எனக் குறிப்பிடும் சோடி எது?
(1) A (2) B (3) C (4) D

❊❊❊


kalvi.lk

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

රහස්‍යයි
அந்தரங்கமானது

## අ.පො.ස. (සා.පෙළ) විභාගය - 2022 (2023)
## க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சை - 2022 (2023)

විෂය අංකය / பாட இலக்கம்: **33** විෂයය / பாடம்: **வரலாறு**

### I පත්‍රය - පිළිතුරු
### I பத்திரம் - விடைகள்

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරෙහි අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරෙහි අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරෙහි අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරෙහි අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 2 | 11. | 1 | 21. | 3 | 31. | 3 |
| 02. | 1 | 12. | 4 | 22. | 1 | 32. | 2 |
| 03. | 4 | 13. | 3 | 23. | 1 | 33. | 2 |
| 04. | 2 | 14. | 2 | 24. | 2 | 34. | 3 |
| 05. | 3 | 15. | 2 | 25. | 1 | 35. | 4 |
| 06. | 1 | 16. | 3 | 26. | 3 | 36. | 1 |
| 07. | 2 | 17. | 4 | 27. | 3 | 37. | 4 |
| 08. | 4 | 18. | 2 | 28. | 2 | 38. | 3 |
| 09. | 3 | 19. | 1 | 29. | 4 | 39. | 1 |
| 10. | 1 | 20. | 4 | 30. | 4 | 40. | 4 |

විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் } එක් පිළිතුරකට ලකුණු / ஒரு சரியான விடைக்கு **01** බැගින் / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் **01 × 40 = 40**

---

පහත නිදසුනෙහි දැක්වෙන පරිදි බහුවරණ උත්තරපත්‍රයේ අවසාන කීරුවේ ලකුණු ඇතුළත් කරන්න.
கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் உதாரணத்திற்கு அமைய பல்தேர்வு வினாக்களுக்குரிய புள்ளிகளை பல்தேர்வு வினாப்பத்திரத்தின் இறுதியில் பதிக.

**නිවැරදි පිළිතුරු සංඛ්‍යාව** / சரியான விடைகளின் தொகை: 25 / 40

**I පත්‍රයේ මුළු ලකුණු** / பத்திரம் I இன் மொத்தப்புள்ளி: 25 / 40

## பகுதி I

1. (அ) (i) கீழே தரப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்தையும் வழங்கப்பட்டுள்ள இலங்கைப் புறவுருவப்படத்தில் குறித்துப் பெயரிடுக.

ஜம்புகோளப்பட்டினம், இரணைமடு, மாகம, அநுராதபுரம், கம்பளை, நீர்கொழும்பு, காலித்துறைமுகம், கலாவாவி, யான்ஓயா, கல்ஓயா, மட்டக்களப்பு, யோதவாவி (12 புள்ளிகள்

(ii) கீழே தரப்பட்டுள்ள வரலாற்று இடங்கள் அனைத்தையும் வழங்கப்பட்டுள்ள பகுதி உலகப் புறவுருவப்படத்தில் குறித்துப் பெயரிடுக.

கொன்ஸ்தாந்திநோபிள், சுயஸ் கால்வாய், பம்பாய், பிரான்ஸ், அரபிக்கடல், ஜப்பான் தீவுகள் (06 புள்ளிகள்

(ஆ) (i) கீழே $A$, $B$, $C$, $D$ எனத் தரப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை ஒழுங்குமுறைப்படி உங்கள் விடைத்தாளில் எழுதுக.

$A$ - இலங்கையில் குடியேற்றங்களை அமைத்த ஆதி மனிதன் எப்பெயரினால் இனங்காணப்பட்டான்?

$B$ - "விண்ணிலிருந்து மண்ணில் பொழியும் ஒரு துளி நீரையேனும் மனிதனுக்குப் பயன்படாது கடலில் கலக்க விடமாட்டேன்." இக்கூற்றினை வெளிப்படுத்திய மன்னன் யார்?

$C$ - மோனலீசா சித்திரத்தை வரைந்த கலைஞரின் பெயரைக் குறிப்பிடுக.

$D$ - வானலைகள் மூலம் செய்திகளைப் பரிமாற்றம் செய்யும் முறையைக் கண்டுபிடித்தவர் யார்? (04 புள்ளிகள்

- $A$, $B$ என்பவற்றில் காட்டப்பட்டுள்ள படங்களை அவதானித்து, கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை வினா இலக்க ஒழுங்குமுறைப்படி உங்கள் விடைத்தாளில் எழுதுக.

(ii) 1. படம் $A$ இல் காட்டப்பட்டுள்ளது என்ன?
2. அது எதற்காகப் பயன்படுத்தப்பட்டது?
3. இந்த ஆக்கத்துடன் தொடர்புடைய சிதைவுகள் கண்டுபிடிக்கப்பட்ட பிரதேசம் எது?
4. இதனை இயக்குவதற்குப் பயன்படுத்தப்பட்ட இயற்கை சக்தி யாது?


(04 புள்ளிகள்)



$A$

(iii) 1. படம் $B$ இல் காட்டப்பட்டுள்ளது என்ன?
2. இதனைக் கண்டுபிடித்தவர் யார்?
3. இது பயன்படுத்தப்பட்ட கைத்தொழில் எது?
4. இது எந்த விடயத்துக்காகப் பயன்படுத்தப்பட்டது?

(04 புள்ளிகள்)



$B$

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka


**33 STE II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2022(2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப் பரீட்சை, 2022(2023)
**General Certificate of Education (Ord. Level) … 23)**


**ඉතිහාසය II**
**வரலாறு II**
**History II**

1. (අ) (i)
1. (அ) (i)
1. (a) (i)

විභාග අංකය / சுட்டெண் / Index No. ..............................




[අනෙක් පිටුව බලන්න / மறுபக்கம் பார்க்க / See next page




-2-

OL/2022(2023)/33/STE-II

## பகுதி I

1.

(ஆ)

(i) (A) ஹோமோசேப்பியன்/ ஹோமோசாப்பியன்

(B) முதலாம் பராக்கிரமபாகு/ மகாபராக்கிரமபாகு

(C) லியனாடோடாவின்சி/ டாவின்சி

(D) குக்லி மார்க்கோனி/ மார்க்கோனி

**(1 x 04 = 04 புள்ளிகள்)**

(ii) (A) இரும்பு உருக்கும் உலை/ இரும்பு உலை

(B) இரும்பினை உருக்குவதற்கு

(C) சமனலவெவ/ பலாங்கொட

(D) காற்று/ காற்றுச்சக்தி/ வளி

**(1 x 04 = 04 புள்ளிகள்)**

(iii)

1. பாதுகாப்பு விளக்கு
2. ஹம்றி டேவி
3. நிலக்கரி
4. சுரங்கத்தினுள் வெளிச்சத்தைப் பெறுவதற்கு/ வெளிச்சத்தைப் பெறுவதற்கு

**(1 x 04 = 04 புள்ளிகள்)**

- ❖ வரலாற்றுக்கு முற்பட்ட மனிதர்கள் வாழ்ந்த வெட்டவெளிப் பிரதேசங்களைப் பெயரிடுவர்.
- ❖ வரலாற்றுக்கு முற்பட்ட மனிதன் குடியிருப்புகளை தெரிவு செய்வதில் கவனம் செலுத்திய விடயங்களை அறிவர்.
- ❖ முன்வரலாற்றுக் காலத்தில் நிலவிய தொழினுட்பங்களை இனங்காண்பர்.
- ❖ ஆரம்ப வரலாற்றுக்காலக் குடியிருப்புக்களின் பரம்பலில் செல்வாக்குச் செலுத்திய விடயங்களை விளக்குவர்.

**பகுதி II**

**2.** (i) வரலாற்றுக்கு முற்பட்ட மனிதன் வாழ்ந்த வெட்ட வெளிக் குடியிருப்புகள் மூன்றின் பெயர்களைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) வரலாற்றுக்கு முற்பட்ட மனிதன் தன்து குடியிருப்புகளைத் தெரிவுசெய்வதில் கவனம் செலுத்திய இரண்டு காரணிகளை எழுதுக. (04 புள்ளிகள்)

(iii) முன் வரலாற்றுக் காலப்பகுதியில் மனிதன் பயன்படுத்திய தொழினுட்பங்களை இரண்டு விடயங்களைக் கொண்டு விவரிக்குக. (05 புள்ளிகள்)

(iv) ஆரம்ப வரலாற்றுக் காலப்பகுதியில் குடியிருப்புக்களின் பரம்பலில் செல்வாக்குச் செலுத்திய மூன்று காரணிகளை விளக்குக. (06 புள்ளிகள்)

(i)

- மினிஹாகல்கந்த
- புந்தல
- பதிராஜவெல
- பெல்லன் பதிபெலஸ்ஸ
- பண்டாரவளை
- ஹோட்டன் சமவெளி
- உடமல்ல

**(இதில் மூன்றுக்கு 1 x 03 = 03 புள்ளிகள்)**

(ii)

- உணவைப் பெறக்கூடிய இயற்கை வளங்கள் நிறைந்த பிரதேசங்கள்
- நீரை இலகுவாகப் பெறக்கூடிய இடங்கள்
- கல்லாயுதம் செய்வதற்கான கற்கள் பெருமளவில் கிடைக்கும் இடங்கள்
- கற்குகைகள் காணப்படும் இடங்கள் (மழைக்காலம்)
- வெட்டவெளிகள் காணப்படும் இடங்கள் (வரண்ட காலநிலையுள்ள பிரதேசங்கள்)

**(2 x 02 = 04 புள்ளிகள்)**

(iii)

- உலோக தொழினுட்பம் / விவசாய உபகரணங்கள் உற்பத்தி
- மட்பாண்ட உற்பத்தி தொழினுட்பம்
- வீடமைக்கும் தொழினுட்பம்
- மயானம் அமைக்கும் தொழினுட்பம் / ஆபரணங்கள் அலங்காரம் தொடர்பான தொழினுட்பம்.

**(02 விடயங்களுக்கு 02 புள்ளிகள்**
**விளக்கம் 03 புள்ளிகள் = 05 புள்ளிகள்)**

(iv)

- வருடாந்த மழைவீழ்ச்சி
- தரைத் தோற்ற வேறுபாடு
- இயற்கை வளங்களின் பரம்பல்
- நீரோடைகள்
- மண்ணின் தன்மை

**(03 விடயங்களுக்கு 03 புள்ளிகள்**
**விளக்கம் 03 புள்ளிகள் = 06 புள்ளிகள்)**

- ❖ பண்டைய சமூகத்தில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட போகங்களைப் பெயரிடுவர்.
- ❖ முற்காலத்தில் சேனைகளில் பயிரிடப்பட்ட பயிர்களை அறிவர்.
- ❖ புராதான காலத்தில் நிலவிய கைத்தொழில்கள் பற்றி விளக்குவர்.
- ❖ முற்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட உள்நாட்டு வர்த்தகம் பற்றி விளக்குவர்.

**3.** (i) புராதன சமூகத்தில் நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்ட மூன்று போகங்களின் பெயர்களைத் தருக. (03 புள்ளிகள்)

(ii) முற்காலத்தில் சேனைப்பயிர்ச்செய்கையில் பயிரிடப்பட்ட நான்கு பயிர் வகைகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) புராதன காலத்தில் இந்நாட்டில் பல்வேறு கைத்தொழில்கள் நிலவியதென்பதை இரண்டு விடயங்களைக் கொண்டு விவரிக்குக. (05 புள்ளிகள்)

(iv) முற்காலத்தில் இந்நாட்டில் ஒழுங்கமைக்கப்பட்ட உள்நாட்டு வர்த்தகம் நிலவிய முறையினை மூன்று விடயங்களைக் கொண்டு விளக்குக. (06 புள்ளிகள்)

(i)

பெரும்போகம், சிறுபோகம், இடைப்போகம், (யால, மகா, மெத) பிடதடஹஸ, மெதஹஸ, அகலகஸ

**(1 x 03 = 03 புள்ளிகள்)**

(ii)

குரக்கன், கொள்ளு, உழுந்து, பயறு, சோளம்(இறுங்கு), கம்பு, வரகு, தினை, ஓமம், நெல், எள்ளு, கடுகு, கரைநெல், தானிய வகைகள், மரக்கறி, கரும்பு, பருத்தி

**(1 x 04 = 04 புள்ளிகள்)**

(iii)

- உலோகக் கைத்தொழில்
  - ➢ உலோக வகைகள்
  - ➢ உலோக வகைக்கேற்ற கைத்தொழில்கள்
- மாணிக்கக் கைத்தொழில்
- யானைத் தந்த செதுக்கல்
- மட்பாண்டக் கைத்தொழில்/ வனைதல்
- நெசவுக் கைத்தொழில்/ நூல்நூற்றல்/ ஆடைக்கைத்தொழில்
- தச்சுக் கைத்தொழில்

**(விடயம் 02 புள்ளிகள்**

**விளக்கம் 03 புள்ளிகள் = 05 புள்ளிகள்)**

(iv)

- வர்த்தக நகரங்கள் காணப்பட்டமை
    - நகரங்களில் வர்த்தகர்கள் வாழ்ந்தமை
    - உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகர்கள்
    - அனுராதபுரத்தில் கால சுமண எனும் வர்த்தக சந்தை காணப்பட்டமை
    - மாகம
- வர்த்தகம் பிரதான ஜீவனோபாயமாக காணப்பட்டமை
- வர்த்தக சங்கங்கள் காணப்பட்டமை
- வர்த்தக சந்தைகள் காணப்பட்டமை
    - கிராம நகரங்களுக்கு அண்மையில் வர்த்தகம் நடைபெற்றமை / காலசுமண / ஹோபிடிகம
    - வர்த்தக சந்தைகளில் பெற்றுக் கொள்ளப்பட்ட பொருட்கள்
    - சொரபொர கல்வெட்டு
- வர்த்தக சட்டங்களும் அதிகாரிகளும்
- சந்தைகளில் அளவிடும் முறைகள் காணப்பட்டமை

**( விடயம் 03 புள்ளிகள்**

**விளக்கம் 03 புள்ளிகள் = 06 புள்ளிகள்)**

Education கல்வி අධ්‍යාපන

- ❖ கோட்டை இராச்சியம் பிரிக்கப்பட்ட முறையை அறிவர்.
- ❖ கண்டியைக் கைப்பற்ற போர்த்துக்கேயர் மேற்கொண்ட நடவடிக்கைகளை விபரிப்பர்.
- ❖ ஒல்லாந்தர் கண்டி இராச்சியத்துடன் மேற்கொண்ட தொடர்புகளை விளக்குவர்.

**4.** (i) விஜயபாகு கொலையின் பின்னர் கோட்டை இராச்சியம் பிரிக்கப்பட்ட மூன்று பிரிவுகளின் பெயர்களைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) பின்வரும் கூற்றுகளுக்குப் பொருத்தமான விடைகளை எழுதுக.

A - பெலந்த பிரதேசத்தில் கோட்டை ஒன்றைக் கட்டி போர்த்துக்கேயருக்கு எதிரான போராட்டத்தை ஆரம்பித்த நபர்

B - மரண சாசனத்தின் மூலம் தனது அரச உரிமையைப் போர்த்துக்கேயரிடம் ஒப்படைத்த மன்னர்

C - ஆசியாவில் ஒல்லாந்தர் தமது செயற்பாடுகளைக் கொண்டு நடாத்திய வர்த்தக சங்கம்

D - கி. பி. 1764 இல் கண்டி ஆக்கிரமிப்பை மேற்கொண்ட ஒல்லாந்த ஆளுநர் (04 புள்ளிகள்)

(iii) கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றுவதற்கு போர்த்துக்கேயர் மேற்கொண்ட இரண்டு முயற்சிகள் பற்றி விவரிக்குக. (05 புள்ளிகள்)

(iv) ஒல்லாந்தர் கண்டி இராச்சியத்துடன் தொடர்புகளைப் பேணுவதற்குப் பின்பற்றிய மூன்று கொள்கைகளைப் பற்றி விவரிக்குக. (06 புள்ளிகள்)

(i)

- கோட்டை
- சீதாவாக்கை
- றைகம

**(1 x 03 = 03 புள்ளிகள்)**

(ii)

(A) வீதிய பண்டார

(B) தர்மபாலன்/ டொன்யுவான் தர்மபாலன்

(C) கீழைத்தேய ஒல்லாந்த வர்த்தக சங்கம்/ ஒல்லாந்த கீழைத்தேச இந்திய வர்த்தக சங்கம்/ VOC

(D) பெரன்வென் எக்/ பெரன்பன் எக்

**(1 x 04 = 04 புள்ளிகள்)**

(iii)

- டொனா கதரினாவை கண்டி இராச்சிய அரசியாக்குவதற்காக
- 1594 பெரலோபேஸ்த சூசா தலைமையிலான ஆக்கிரமிப்பு (தந்துரே போர்)
- 1602 தொன்ஜெரனிமோத அசவேது ஆக்கிரமிப்பு ( பலனபோர்)
- 1630 கொன்ஸ்தாந்தினுதசா ஆக்கிரமிப்பு (ரந்தெனிவெல போர்)
  - கொன்ஸ்தாந்தினுதசா ஊவா பிரதேசத்தினூடாக கண்டி இராச்சியத்தை
  - ஆக்கிரமித்தல்
  - ரந்தெனிவெல போர்
  - போர்த்துகேய படையிலிருந்த சுதேசிகள் கண்டி இராச்சியத்துடன் இணைந்து கொண்டமை.
  - முயற்சிகள் தோல்வியடைந்தமை
- 1638 தியாகு த மெல்லோ - கண்டி ஆக்கிரமிப்பு (கன்னொருவப் போர்)
  - போர்த்துகேயப் படை
  - இரண்டாம் இராஜசிங்க மன்னனின் தந்திரோபாயங்கள்
  - கண்ணொருவ போர்
  - ஆக்கிரமிப்பு தோல்விடைந்தமை

**[விடயம் 02 புள்ளிகள்**

**விளக்கம் 03 புள்ளிகள் = 05 புள்ளிகள் ]**

(iv)

- ஒல்லாந்த வர்த்தக சங்கத்திற்கு நஷ்டம் ஏற்படுவதைத் தவிர்த்தல்
- கண்டி அரசர்களின் நல்லெண்ணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல்
- மன்னனின் சமய நடவடிக்கைகளுக்கு உதவிகள் வழங்கியமை
- பொருளாதார ரீதியாக உச்ச இலாபத்தைப் பெற்றுக் கொள்வதற்கான கொள்கை
  - ➢ ஏனைய வெளிநாட்டவருடன் தொடர்பு கொள்ளும் சந்தர்ப்பங்களுக்குத் தடை ஏற்படுத்துதல்
  - ➢ கடவைகளை மூடுதல்

**[விடயம் 03 புள்ளிகள்**

**விளக்கம் 03 புள்ளிகள் = 06 புள்ளிகள்]**



kalvi.lk

❖ கண்டி இராட்சியத்தில் வசூலிக்கப்பட்ட வரிவகைகள், குற்றவாளிகளுக்கு வழங்கப்பட்ட தண்டனைகள் பொருளாதார அமைப்பு, சமூகப் பண்பு போன்றவற்றை அறிந்து விளக்குவர்.

5. (i) கண்டி இராச்சியத்தில் நடைமுறையிலிருந்த மூன்று வரிவசூலிப்பு (பத்தே) ஒழுங்கமைப்பின் பெயர்களைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) கண்டி இராச்சியத்தில் குற்றவாளிகளுக்கு வழங்கப்பட்ட நான்கு தண்டனைகளின் பெயர்களைத் தருக. (04 புள்ளிகள்)

(iii) கண்டி இராச்சியத்தின் பொருளாதார அமைப்பின் இரண்டு பண்புகளை விவரிக்குக. (05 புள்ளிகள்)

(iv) கண்டி இராச்சியத்தில் சமூக ஒழுங்கமைப்பில் காணப்பட்ட மூன்று பண்புகளை விளக்குக. (06 புள்ளிகள்)

(i)

- மடிகே பத்த (போக்குவரத்திற்கான வரி)
- குருவே பத்த (யானை பிடித்தலுக்கான வரி)
- படஹெல பத்த (வனைதலுக்கான வரி)
- ரதாபத்த (சலவைக்கான வரி)
- ஹெந்த பத்த(நெசவுக்கான வரி)

**(1x 3 = 03 புள்ளிகள்)**

(ii)

- கன்னத்தில் அறைதல்
- விலங்கிடுதல்
- முழந்தாழிடச் செய்தல்
- முடியைக் கத்தரித்தல்
- தென்னை மட்டையால் அடித்தல்
- துர்நாற்றத்தின் மத்தியில் வைத்தல்
- கசையால் அடித்தல்
- கீழ் குலத்தவராக்குதல்
- நாடு கடத்துதல்
- நீரில் மூழ் கடித்துக் கொல்லுதல்
- யானையால் மிதித்துக் கொல்லுதல்

**(1 x 4 = 04 புள்ளிகள்)**

(iii)

- சுயதேவைப் பொருளாதார முறை
- விவசாயமும் அத்தம் முறையும்
- நெற்பயிர்ச் செய்கை
- வீட்டுத்தோட்ட செய்கை
- மிருக வளர்ப்பு
- சேனைப்பயிர்ச் செய்கை
- ஏனைய கைத்தொழில்கள்
  இரும்பு, உலோகம், மரம், அரக்கு, பன்புல்

**[விடயம் 02 புள்ளிகள்**
**விளக்கம் 03 புள்ளிகள் = 05 புள்ளிகள்]**

(iv)

- நிலம் அனைத்தும் அரசனுக்கு சொந்தமானது.
- நிலம் உரிமையையும், அனுபவித்தலையும் அடிப்படையாகக் கொண்டு வகைப்படுத்தப்பட்டிருத்தல்
- ராஜகாரிய சேவை முறை
- கிராமிய சமூகம் காணப்பட்டது
- சமூகத் தொடர்புகள் குலமுறைமை அடிப்படையில் அமைந்திருந்தமை
- மூன்று வகைத் திருமண முறைகள் காணப்பட்டது.
- குடும்பம் பிரதான சமூக அலகாக இருந்தது
- நற்பண்புகளைப் பின்பற்றுதல் சமூகத்தின் பிரதான பண்பாகும்.
- அனைத்து நடவடிக்கைகளும் உழைப்புப் பரிமாற்ற முறையில் (அத்தம்) இடம் பெற்றது

**[விடயம் 03 புள்ளிகள்**
**விளக்கம் 03 புள்ளிகள் = 06 புள்ளிகள்]**

❖ பிரித்தானியரின் கீழ் கோப்பிப் பயிர் மேற்கொள்ளப்பட்ட பிரதேசங்களைப் பெயரிடுவர்.
❖ கோப்பிச் செய்கையின் வீழ்ச்சியில் செல்வாக்கு செலுத்திய காரணிகளை விபரிப்பர்.
❖ பெருந்தோட்டச் செய்கை அறிமுகப்படுத்தப்பட்டமையால் இந்நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட தீமைகளை விளக்குவர்.

6. (i) பிரித்தானியரின் கீழ் கோப்பிப் பயிர்ச்செய்கை பரவியிருந்த மூன்று பிரதேசங்களின் பெயர் தருக. (03 புள்ளிகள்)

(ii) கோப்பிப் பயிர்ச்செய்கை வீழ்ச்சியடைவதில் செல்வாக்குச் செலுத்திய இரண்டு காரணங்களை எழுதுக. (04 புள்ளிகள்)

(iii) தேயிலைப் பயிர்ச்செய்கை விருத்தியில் செல்வாக்குச் செலுத்திய இரண்டு காரணிகளை விவரிக்குக. (05 புள்ளிகள்)

(iv) பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையை அறிமுகப்படுத்தியதன் காரணமாக இந்நாட்டின் பொருளாதாரத்துக்கு அனுகூலமானதும் பிரதிகூலமானதுமான தாக்கம் ஏற்பட்டுள்ளது என்பதை மூன்று விடயங்களைக் கொண்டு விளக்குக. (06 புள்ளிகள்)

(i)

- தும்பறைப் பள்ளத்தாக்கு
- கம்பளை
- பேராதனை
- மாத்தளை
- பதுளை
- கண்டி

**(01 x 03 = 03 புள்ளிகள்)**



kalvi.lk

(ii)

- இலண்டன் சந்தையில் இலங்கை கோப்பிக்கு கடும் போட்டி நிலவியமை
- உலகப் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தமை
- ஹெமீலியா வெஸ்டாக்ஸ் என்னும் இலைவெளிறல் நோய்த்தாக்கம்
- கோப்பிப் பயிர்ச்செய்கையை விட தேயிலைப் பயிர்ச்செய்கை இலங்கையில் வெற்றியளித்தமை

**(02 x 02 = 04 புள்ளிகள்)**

(iii)

- உலர்வலயம் தவிர்ந்த இந்நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பயிர்ச்செய்கை வெற்றியடைந்தமை
- இலங்கைத் தேயிலைக்கு உலக சந்தையில் கேள்வி அதிகரித்தமை
- உயர்தரமான தேயிலையை உற்பத்தி செய்ய முடிந்தமை
- இலாபகரமான முறையில் உழைப்பை பெற்றுக் கொண்டமை
- போக்குவரத்து வசதிகள் முன்னேற்றமடைந்ததனால் கொண்டு செல்லுதல் இலகுவானமை
- தேயிலைப் பயிர்ச்செய்கைக்கு அரச அனுசரணை கிடைத்தமை
- வெளிநாட்டு முதலீடுகள் கிடைக்கப் பெற்றமை
- உட்கட்டமைப்பு வசதிகள் முன்னேற்றமடைந்தமை

**[விடயம் 02 புள்ளிகள்**
**விளக்கம் 03 புள்ளிகள் = 05 புள்ளிகள்]**

(iv)

<u>அனுகூலம்</u>

- ஏற்றுமதிப் பயிராக பெருந்தோட்டப்பயிர்கள் அறிமுகப்படுத்தப்பட்டமை
- தற்போதும் முக்கிய வருமான மூலமாக இருக்கின்றமை
- வர்த்தக விருத்தி
- பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைப் பிரதேசங்களுக்கு அண்மையில் பல்வேறு வகையான தொழில்கள் வளர்ச்சியடைந்தமை
  - விடுமுறைக்கால விடுதிகள்
  - உணவு விடுதிகள்
  - சமூக நிலையங்கள்
  - நெசவுக் கைத்தொழில்கள்
  - புதிய இயந்திரங்களின் பயன்பாடு
  - தொழில்வாய்ப்புக்கள்
- தோட்டத் தொழிலாளர்களின் (இந்தியா) இலாபகரமான உழைப்பு

<u>பிரதிகூலம்</u>

- சுதேச விவசாயம் வீழ்ச்சியடைந்தமை
- பணத்தை அடிப்படையாகக் கொண்டு அனைத்து நடவடிக்கைகளும் தீர்மானிக்கப்பட்டமை
- காணி உரிமையற்ற மக்கள் உருவாகியமை
- அதிக மக்கள் ஏழைகளாகியமை
- மது பாவனை நாடு எங்கும் பரவியமை

**(விடயம் 03 புள்ளிகள்**
**விளக்கம் 03 புள்ளிகள் = 06 புள்ளிகள்)**

❖ 1956 தேர்தலில் செயற்பட்ட சக்திகளின் பெயர்களை இனங்காண்பர்.
❖ 1978 யாப்பின் அடிப்படை மனித உரிமைகளையும் குறிப்பிடுவர்.
❖ சுதந்திரத்தின் பின் கல்வி முன்னேற்றத்துக்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை விபரிப்பர்.
❖ சுதந்திரத்தின் பின் இலங்கையில் நெற்செய்கை விருத்திற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை விளக்குவர்.

7. (i) 1956 பொதுத் தேர்தலில் செயற்பட்ட ஐம்பெரும் சக்திகளில் மூன்று சக்திகளின் பெயர்களைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)
(ii) 1978 அரசியல் யாப்பில் உள்ளடங்கியுள்ள அடிப்படை மனித உரிமைகள் இரண்டினை எழுதுக. (04 புள்ளிகள்)
(iii) சுதந்திரத்தின் பின்னரான மூன்று தசாப்த காலத்தில் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களினால் கல்வி முன்னேற்றத்துக்காக எடுக்கப்பட்ட இரண்டு நடவடிக்கைகளை விவரிக்குக. (05 புள்ளிகள்)
(iv) சுதந்திரத்தின் பின்னர் இலங்கை அரசாங்கங்களினால் நெற்பயிர்ச்செய்கை விருத்திக்காக மேற்கொள்ளப்பட்ட மூன்று நடவடிக்கைகளை விளக்குக. (06 புள்ளிகள்)

(i)

- பிக்குகள்
- சுதேச வைத்தியர்கள்
- ஆசிரியர்கள்
- விவசாயிகள்
- தொழிலாளர்கள்

**(01 x 03 = 03 புள்ளிகள்)**

(ii)

- சட்டத்தின் முன் அனைவரையும் சமமாக மதித்தல்
- பேச்சு கருத்தைத் தெரிவித்தல் தொடர்பான சுதந்திரம்
- கொடூர தண்டனைகளிலிருந்து விடுபடுவதற்கான சுதந்திரம்
- விரும்பிய சமயத்தை, கொள்கைகளை, நம்பிக்கைகளைப் பின்பற்றும் சுதந்திரம்
- விரும்பிய தொழிலைத் தெரிவு செய்யும் சுதந்திரம்

**(02 x 02 = 04 புள்ளிகள்)**


kalvi.lk

(iii)

- இலவசக் கல்விக் கொள்கையின் அடிப்படையில் கல்வி நடவடிக்கைகள் விருத்தியடைந்தமை
- நாடெங்கிலும் பாடசாலைகளை ஸ்தாபித்தமை
- பாடத்திட்டம், ஆசிரிய பயிற்சி நடவடிக்கைகளை நவீன மயப்படுத்த நடவடிக்கை எடுத்தமை
- விஞ்ஞான ஆய்வுகூட நூல் நிலைய வசதிகள் விரிவாக்கப்பட்டமை
- மாணவர்களுக்கான நலன்புரி நடவடிக்கைகளை மேம்பாடடையச் செய்தமை
  - மதிய உணவு, இலவச பாடநூல், வைத்தியம், பல்வைத்திய சேவை, இலவச சீருடை
- சலுகை அடிப்படையிலான போக்குவரத்து வசதிகள்
- தொழினுட்ப கல்வி நிறுவகங்களை ஸ்தாபித்தல்
- புதிய பல்கலைக்கழகங்கள் ஸ்தாபித்தல்
- ஆசிரிய ஆலோசனை சேவை அரசிடம் ஒப்படைக்கப்பட்டமை

**(விடயம் 02 புள்ளிகள்**

**விளக்கம் 03 புள்ளிகள் = 05 புள்ளிகள்)**

Education கல்வி අධ්‍යාපන

(iv)

- புதிய விவசாயக் குடியேற்றங்கள் ஆரம்பிக்கப்பட்டமை
  - 15 குடியேற்றத்திட்டங்கள் ஸ்தாபிக்கப்பட்டமை
  - அதற்கு அரசு அனுசரணை வழங்கியமை
  - உலர் வலயத்தில் குளங்கள், கால்வாய்கள் புனரமைக்கப்பட்டு அதன் பயனை மக்களுக்கு வழங்கியமை
  - முதலாவது அறுவடையைப் பெற்றுக்கொள்ளும் வரை உதவி நிதியை வழங்கியமை
  - அறுவடையை சந்தைப்படுத்த வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தமை
- மகாவலி அபிவிருத்தித் திட்டம்
  - மகாவலி கங்கை நீரைப் பயன்படுத்தி பாரிய நீர்த்தேக்கங்களை அமைத்தல்
  - மகாவலி நீரைக் கொண்டு உலர்வலயத்தை வளமாக்குதல்

- விவசாய சேவை மத்திய நிலையங்கள் ஸ்தாபித்தல்
- நெல் ஆராய்ச்சி நிலையங்கள் ஸ்தாபித்தல்
- அதிக விளைச்சல் தரும் விதையினங்கள் அறிமுகப்படுத்தல்
- அரச வங்கிகள் மூலம் விவசாயிகளுக்கு கடனுதவி வழங்கல்
- நெல் சந்தைப்படுத்தல் சபைகளை ஸ்தாபித்தல்
- உரப் பாவனையைப் பிரபல்யப்படுத்தல்
- விவசாய காப்புறுதி திட்டம் அறிமுகப்படுத்தல்
- விவசாய ஓய்வூதிய திட்டம் அறிமுகப்படுத்தல்
- புதிய நீர்ப்பாசன திட்டங்கள் அமைத்தல்

**(விடயம் 03 புள்ளிகள்**

**விளக்கம் 03 புள்ளிகள் = 06 புள்ளிகள்)**

❖ பிரித்தானியர் வட அமெரிக்காவில் குடியேற்றங்களை நிறுவ அடிப்படையாக அமைந்த காரணிகளை இனங்காண்பர்.
❖ பிரான்சியப் புரட்சி ஏற்பட்டமைக்கான காரணங்களை விளக்குவர்.
❖ ரஷ்யப் புரட்சியினால் ஏற்பட்ட விளைவுகளை விபரிப்பர்.

## பகுதி III

8. (i) பிரித்தானியரால் வட அமெரிக்காவில் தாபிக்கப்பட்ட மூன்று குடியேற்றங்களின் பெயர்களைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)
 (ii) ஐரோப்பியர்கள் அமெரிக்காவில் குடியேற்றங்களைத் தாபிப்பதற்கு அடிப்படையாக அமைந்த இரண்டு காரணங்களை எழுதுக. (04 புள்ளிகள்)
 (iii) பிரான்சிய புரட்சி ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்திய இரண்டு காரணங்களை விவரிக்குக. (05 புள்ளிகள்)
 (iv) ரஷ்யப் புரட்சியின் விளைவுகள் மூன்றினை விளக்குக. (06 புள்ளிகள்)

(i)

- வேர்ஜினியா
- மசாசுசெற்ஸ்
- நியுயோர்க்
- நியுஹம்ஷயர்
- மேரிலாந்து
- கனக்டிக்கட்
- ரோட்தீவு
- டெலவயர்
- வடகரோலினா
- நியூஜெர்சி
- தென்கரோலினா
- பென்சில்வேனியா
- ஜோர்ஜியா

**(01 x 03 = 03 புள்ளிகள்)**

(ii)

- கத்தோலிக்க புரட்டஸ்தாந்து மதத்தவரிடையே ஏற்பட்ட மோதல் காரணமாக சமய சுதந்திரத்தை எதிர்பார்த்து மக்கள் புதிய இடத்திற்கு செல்ல விரும்பியமை
- வர்த்தகத்தின் பொருட்டுப் புதிய பிரதேசங்களில் நிலங்களைப் பெற்றுக் கொள்வதன் மூலம் வாழ்வைச் சிறப்பாக்கிக் கொள்ள மக்கள் விரும்பியமை
- புகழையும் செல்வத்தையும் அதிகரிக்கும் நோக்குடன் ஐரோப்பிய நாடுகளின் ஆட்சியாளர்கள் புதிய இடங்களைக் கண்டு பிடிப்பதற்கு ஆர்வம் காட்டியமை

**(02 x 02 = 04 புள்ளிகள்)**

(iii)

- அரசிடம் காணப்பட்ட எல்லையற்ற அதிகாரம்
  - ஊழல் நிறைந்த ஆட்சி
  - எதிரிகளை அடக்குவதற்காக எடுத்த நடவடிக்கைகள்
  - அரசனின் அதிசுகபோக வாழ்க்கை
- பொதுமக்களுக்கும் அரசனுக்கும் இடையே காணப்பட்ட இடைவெளி அதிகரித்தமை
  - பொதுமக்கள் அரசனைச் சந்திப்பதற்கான அனுமதி மறுக்கப்பட்டமை
  - அரசனைச் சூழ இருந்த மதகுருமாரும் பிரபுக்களும் பொதுமக்கள் தொடர்பில் சரியான தகவலை வழங்காமை
- அரச ஆட்சி அதிக ஊழல் நிறைந்ததாகக் காணப்பட்டமை
  - பிரதேச நிர்வாகிகளின் வினைத்திறனற்ற ஆட்சி/ ஊழல் நிறைந்ததாகக் காணப்பட்டமை
  - ஆலோசனை சபையினதும் அமைச்சரவையினதும் செயற்பாடுகள்
  - இன்டென்டன் அதிகாரிகள் நியமிக்கப்பட்டமையால் மக்கள் துன்பத்திற்குள்ளாகியமை
- நாட்டின் பெரும்பான்மையான சாதாரண மக்களுக்கு சலுகைகள் எதுவும் கிடைக்காமை
  - மத்தியதர வர்க்கத்திற்கு அரசியலுரிமை கிடைக்காமை

- நில உரிமை பிரபுக்களுக்கும், குருமாருக்கும் கிடைத்தமையால் பொதுமக்கள் துன்பம் அடைந்தமை

- பிரபுக்களிற்கு வழங்கப்பட்ட சலுகைகள்
- வினைத்திறனற்ற வரி அறவீடு
- தத்துவஞானிகளின் கொள்கைகள், கருத்துக்கள்
- திருச்சபையின் சர்வாதிகாரம்
- தேவையற்ற யுத்த செலவு
- ஸ்டேட் ஜெனரல் பாரளுமன்றம் 175 வருடங்களாக கூட்டப்படாமை

**(விடயம் 02 புள்ளிகள்**

**விளக்கம் 03 புள்ளிகள் = 05 புள்ளிகள்)**

(iv)

- சார் மன்னர்களின் அதிகாரமும் ஆட்சிமுறையும் வீழ்ச்சியடைந்தமை
- லெனின் தலைமைத்துவத்தின் கீழ் ஆட்சி ஸ்தாபிக்கப்பட்டமை
  - சமஉடமைக் கொள்கையினடிப்படையிலான செயற்பாடுகள்
  - சமூக உரிமை
- பொதுவுடமையாக்கப்படல்
  - தொழிற்சாலைகள், வங்கி, போக்குவரத்து
- ரஷ்யா சோவியற் சமவுடமைக் குடியரசு எனும் பெயரில் அறிமுகமானமை
- சம உடமைக் கொள்கை உலகம் முழுவதும் பரவியமை

**(விடயம் 03 புள்ளிகள்**

**விளக்கம் 03 புள்ளிகள் = 06 புள்ளிகள்)**

❖ முதலாம் உலகமாகாயுத்தத்துடன் தொடர்புடைய மத்திய ஐரோப்பிய வல்லரசு நாடுகளை இனங்காண்பர்.
❖ முதலாம் உலக மகாயுத்தத்தின் விளைவுகளை இனங்காண்பர்.
❖ உலக மகாயுத்தத்திற்கான காரணங்களை விபரிப்பர்.

9. (i) முதலாம் உலக மகா யுத்தத்துடன் தொடர்புடைய அச்சு நாடுகள் மூன்றின் பெயர்களைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) A தொடக்கம் D வரையான பின்வரும் கூற்றுகளுக்குப் பொருத்தமான விடைகளை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவுசெய்து எழுதுக.

A - ஐக்கிய ஜேர்மனியை உருவாக்குவதற்கு முன்னோடியாக இருந்த தலைவன்.

B - முதலாம் உலக மகா யுத்தத்தின்போது இங்கிலாந்தின் பிரதம மந்திரி

C - இத்தாலியின் பாஸிசவாதத் தலைவர்

D - ஐக்கிய நாடுகள் சபையில் வீற்றோ அதிகாரம் உடைய நாடு.

(லொயிட் ஜோர்ஜ், வின்ஸ்சன்ட் சேர்ச்சில், பெனிடோ முசோலினி, அடோல்ப் ஹிட்லர், சீனா, இந்தியா, ஓட்டோ வொன் பிஸ்மார்க், கெய்சர் வில்லியம்) (04 புள்ளிகள்)

(iii) முதலாம் உலக மகா யுத்தத்தின் இரண்டு விளைவுகளை விவரிக்குக. (05 புள்ளிகள்)

(iv) இரண்டாம் உலக மகா யுத்தம் ஏற்படுவதற்குக் காரணமான மூன்று விடயங்களை விளக்குக. (06 புள்ளிகள்)

(i)

- ஜேர்மனி
- ஆஸ்திரியா
- இத்தாலி
- துருக்கி
- பல்கேரியா
- ஹங்கேரி

(Open Marks)

**(1 x 3 = 03 புள்ளிகள்)**

(ii)

A – ஓட்டோவொன் பிஸ்மார்க்
B – லொயிட் ஜோர்ஜ்
C – பெனிடோ முசோலினி
D – சீனா

**(1 x 4 = 04 புள்ளிகள்)**

(iii)

- மத்திய ஐரோப்பிய வல்லரசு அணி நாடுகள் தோல்வி அடைந்தமை
- நட்பு நாடுகள் வெற்றி பெற்றமை
- பெருமளவிலான மனித உயிர்கள், சொத்துக்கள் அழிவடைந்தமை
- வேர்செல்ஸ் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டமை ஜேர்மனிக்கு அதிக தண்டனை வழங்கப்பட்டமை .
- ஐரோப்பாவில் சர்வாதிகார முடியாட்சி வீழ்ச்சியடைந்தமையும் புதிய அரசுகள் தோற்றம் பெற்றமையும்

- ஐரோப்பிய பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தமை
- சர்வதேச சங்கம் தோற்றம் பெற்றமை

**(விடயம் 02 புள்ளிகள்**
**விளக்கம் 03 புள்ளிகள் = 05 புள்ளிகள்)**

(iv)

- ஹிட்லரின் நடவடிக்கைகள்
- முசோலினியின் நடவடிக்கைகள்
- ஜப்பானின் நடவடிக்கைகள்
- சர்வதேச சங்கம் பலவீனம் அடைந்தமை

**(விடயம் 03 புள்ளிகள்**

**விளக்கம் 03 புள்ளிகள் = 06 புள்ளிகள்)**

Education கல்வி அධ්‍යාපන

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page